# மாணாக்கர் வயிற்றுக்குச் சோறிந்து கல்வி பயிற்றுவிக்கும் தளபதி பைந்தமிழ்போல் வாழ வாழ்த்துவன்!



உற்றவுடல் வயிற்றுக்கும் உணவளித்தே
இளமைதனில் காக்க லுற்றால் /
உடல்நோயும் அண்டாதே ஒப்பில்லா
வலிமையுடல் உறுமென் றோர்ந்து //

கற்கின்ற மாணாக்கர் கடும்பசிக்குக்
காலையுண(வு) அளித்து நாளும் /
கல்வியினைப் பயிற்றுவிக்கும் கலை
ஞரின்சேய் தளபதியை வாழ்த்துகின்றேன் //

பெற்றெடுத்தோர் பிள்ளைகளைப் பேணு
தல்போல் கற்குபிள்ளை அனைவருக்கும் /
பசியதனை ஓடவைத்துப் படிப்பதிலே
நாட்டமுடன் கற்க வைத்து //

நற்றமிழ மாணாக்கர் ஞாலத்தில்
ஒளிர்கதிராய் ஒளிர வைக்க /
நல்லுணவைக் காலையிலே அளிக்
கின்ற தளபதிபைந் தமிழ்போல் வாழி ! //

**புலவர் பழ.தமிழாளன்,**
இயக்குநர் பைந்தமிழியக்கம்,
திருச்சிராப்பள்ளி.



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட பொதுக் குழு உறுப்பினர் ஆறுமுகம் ஏற்பாட்டில் மரக்கன்றுகளை மாவட்ட செயலாளர் கோ.தளபதி நட்டு வைத்தார். உடன் மாநில தீர்மான குழு செயலாளர் அக்ரி கணேசன், மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன், மண்டல தலைவர்கள் வாசுகி சசிக்குமார், சரவண புவனேஸ்வரி, இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தரராஜன், மாமன்ற உறுப்பினர் முத்துமாரி, வட்ட கழக செயலாளர்கள் வி.சி.மாதவன், எ.வேலு, பி.எம். மருது, ஆர்.ஆர்.மகேந்திரன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண விவரம்

கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு மற்றும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். அந்தப் பயண விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| **28-08-2023 திங்கள்கிழமை** | | |
| காலை 11.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரியலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |
| இரவு 7.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலை, பெரம்பலூர் | அரியலூர் & பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| **29-08-2023 செவ்வாய்க்கிழமை** | | |
| காலை 10.30 மணி | கழுதூர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் | கடலூர் கிழக்கு & மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |

அன்பகம், சென்னை – 18.

நாள் : 25–08–2023.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் - கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், ஆக. 28-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 26 .08.2023, சனிக்கிழமை அன்று மாலை, கே.மணியன் மஹால், காட்டுமன்னார்கோவில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.

மாநில இளைஞரணி துணைச் செயலாளர் - இளைஞர் அணி மண்டல பொறுப்பாளர் அப்துல் மாலிக், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை நமது மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள். அவருக்கு நம் மாவட்டக் கழகத்தின் சார்பாக மாவட்டக்கழகத்தின் செயலாள ரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் வரவேற்பு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது.

நாளை (29.08.2023) காலை நடைபெறும் கடலூர் மாவட்ட ஒருங்கிணைந்த இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பல்வேறு துறைகள் ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கருத்துரையாற்ற உள்ளார்கள். ஒருங்கிணைந்த இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு அக்கூட்டத்தின் தீர்மானங்களுக்கு ஏற்ப சிறப்பாக செயல்படுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்திய துணைக் கண்டமே போற்றிட, முதல்வர் நம் உயிருக்கு நிகரான உத்தமத் தலைவர் தளபதி அவர்கள் 25.08.2023 அன்று இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி 31008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன் பெறும் வகையில் தொடங்கி வைத்துள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த ஊரான திருக்குவளையில் அவர் படித்த பள்ளியில் காலை உணவுத் திட்டத்தின் படி மாணவர்களுக்கு உணவு வழங்கி “இன்று எனது வாழ்விலோர் பொன்னாள்” என மகிழ்வுடன் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார். கடலூர் கிழக்கு மாவட்டத்தில் நமது மாவட்டக் கழக செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சி.என்.பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு உணவளித்து கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

திராவிடமாடல் அரசின் பேராண்மைத் திட்டமாக காலை உணவு திட்டத்தை இந்தியாவிற்கு அறிமுகம் செய்து வைத்து தலைநிமிர் பெருமையை தமிழ்நாட்டுக்கு அளித்த முதல்வர் தளபதி அவர்களுக்கு இக்கூட்டம் வணங்கி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் தலைமைக் கழக ஆணைப்படி, மாவட்ட செயலாளர் வழிக்காட்டுதல் படி மாவட்டம் முழுவதும் கழக நிர்வாக அமைப்புகள் மற்றும் அனைத்து அணிகளின் சார்பாக நிகழ்வுகள் நடைப்பெற்று வருகின்றன. மேலும் தொடர்ந்து ஓராண்டு காலத்திற்கு கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது என்றும் இளைஞர்கள், மாணவ, மாணவியர்கள் தனித்திறன் போட்டிகளையும் நடத்தி சிறப்பாக கொண்டாடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

கழக இளைஞரணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று பல்வேறு பணிகளால் இயக்கத்தின் முதன்மை அணியாக பெயர் பெற்று இளைஞரணி முதல்வர் தலைவர் தளபதியின் பாராட்டுக்களைப் பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் பெருமைக் கொள்ளும் வண்ணம் வருகிற டிசம்பர் 17, சேலம் மாநகரில் இளைஞரணியின் 2வது மாநில மாநாடு நடைப்பெறவுள்ளது.

அம்மாநாடு, இந்திய அளவில் எதிர்பார்ப்புகளை உருவாக்கிடும் முக்கியத்துவம் பெற்றதாகும். அம் மாநாட்டிற்கு நமது மாவட்டத்தின் சார்பில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பது என்றும், மாநாடு விளம்பரங்களை, பிரச்சாரங்களை அனைத்துப் பகுதிகளிலும் மாவட்ட இளைஞரணியினர் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.டி.எஸ். மணி
**ஆகஸ்ட் 28 (1993)**




செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க. நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.

செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அன்பில் பொய்யாமொழி
**ஆகஸ்ட் 28 (1999)**



திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.

தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.

1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**